நூல் நயப்புரை: சமூகப்பயம், மதிப்பின் பாதிப்புக்கு அப்பால் அறத்தைப்பேசும் ' சொல்ல மறந்த க

Written by - ஏலையா க. முருகதாசன் - ஜேர்மனி -
Thursday, 04 August 2016 19:15 - Last Updated Thursday, 04 August 2016 19:22

அவுஸ்திரேலியாவில் வசிக்கும் எழுத்தாளரும் ஊடகவியலாளருமான லெ.முருகபூபதி
அவர்கள் நீண்ட காலமாக உள்ளத்தில் பூட்டி வைத்த பல இரகசியங்களை சொல்ல
மறந்த கதைகள் என்று கோடிட்டு சொல்லியுள்ள நூல்தான் சொல்ல மறந்த
கதைகள். ஒவ்வொரு ஆண் பெண்ணிடமும் மனம் என்னும் அதளபாதாளத்தில் பல இரகசியங்களைக் கொண்ட பல அடுக்குகள் தொல்பொருள் போல புதைந்து கிடக்கின்றன.

" நான் வெளிப்படையானவன் " எனச் சொல்லும் ஒவ்வொரு மனிதனும் உண்மையில் வெளிப்படையானவர்கள்தானா ? என்ற சந்தேகம் இருக்கவே செய்கின்றது. பொதுவாழ்வில் ஈடுபடுவோரும் எழுத்து, ஊடகத்துறையில் ஈடுபடுவோரில் அங்கொன்றும் இங்கொன்றுமாக சிலரும் தமது அனுபவங்களை வெளிப்படையாக எழுத்து மூலமாக பொதுவெளிக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். சில உண்மைகளை காலம் வெளிக்கொண்டு வரும் என்பதற்கு உதாரணமாக இருப்பதுதான் லெ.முருகபூபதி அவர்களின் சொல்ல மறந்த கதைகள் என்ற நூலாகும்.

மண்ணுக்கு மேல் கற்களைப் பரப்பி வைத்தாலும் புதையுண்டு கிடக்கும் விதை, கற்களுக்கிடையில் கிடைக்கும் இடைவெளிக்கூடாக முளையாகி வீரிட்டு எழுவது போல் எழுந்திருக்கிறது. இந்நூலில் கிட்டத்தட்ட 19 தலைப்புகளில் தனது அனுபவங்களைப் பகிர்ந்திருக்கிறார் நூலாசிரியர். நம்பிக்கை, எதிர்பாராதது, காவி உடைக்குள் ஒரு காவியம், காலிமுகம், கண்ணுக்குள் சகோதரி, உயிர்ப்பிச்சை, கண்டம், விபத்து, தமிழ் மூவேந்தர்களும் ருஷ்ய மன்னர்களும், அநாமதேய தொலைபேசி அழைப்பு, வீணாகிப் போன வேண்டுகோள், லிபரேசன் ஒப்பரேசன் ஒத்திகை, நிதானம் இழந்த தலைமை, வழிகாட்டி மரங்கள் நகருவதில்லை, காத்திருப்பு
- புதுவை இரத்தினதுரை, ஏரிக்கரைச் சிறைச்சாலை, மனமாற்றமும் மதமாற்றமும்,

1 / 4



மரணதண ்டனதைத் தீ ர ் ப ் பு , மனிதம ் , பின ் தொடருும ் வியட ் நாம ் தவேதைன ஆகிய தலபைப ்புகளில ் எழுுதப ் பட ்ட ஒவ ் வொரு அனுபவக ் கட ்டுரயைுும ் ஒரு சிறுகதை வடிவத ் தபைப ் பறெ ் றுு நிற ் கின ் றன.
உண ் மகைளபைப ் பசேுவதற ் குத ் துணிவுு வணே ் டுும ் . ஆவணப ் படுுத ் தலில ் இதுு ஒரு தனிரகம ் . எழுுத ் துு ஊடகங ் கள ் சிந ் தனைய விரிவாக ் கத ் தால ் புதுுப ் புதுு கிளகைளாக வளர ் ந ் துு நிற ் கின ் றன. இந ் நூலில ் உள ் ளவற ் றை முுழுுமயைாக வாசகர ் கள ் மன ் கொண ் டுு வந ் துு வபைபதுு சிரமமானதுு. ஏனனெில ் ஒவ ் வொருு தலபைப ் பின ் கீ ழ ் எழுுதப ் பட ் டவற ் றை விபரிப ் பதாயின ் அதுுவுும ் ஒருு நூல ் வடிவபைப ் பறெ ் றுுவிடுும ் . எனவே சில தலபைப ்புகளின ் கீ ழ ் எழுுதப ் பட ் டவற ் றில ் ஆங ் காங ் கே சில பக ் கங ் களில ் உள ் ளவற ் றமை மிகச ் சுருுக ் கமாகத ் தர முுயற ் சிக ் கிறனே ் .

நம ் பிக ் கை என ் ற தலபைப ் பில ் இடம ் பறெுும ் பதிவுு, சிங ் கள அரசியல ் வாதிகளுுக ் கு இருுந ் த சோதிட நம ் பிக ் கயைமை வளிெப ் படுுத ் தி நிற ் கின ் றதுு. அரசியலில ் தமதுு எதிர ் காலம ் எப ் படி அமயைுும ் என ் பதயைுும ் தாங ் கள ் எடுுக ் க வணே ் டிய பரிகாரம ் என ் ன என ் பதுு பற ் றி வத ் தளயைில ் இருுக ் குும ் தமிழ ் சோதிடரிடம ் தமிழில ் இருுந ் த சாதகத ் தை காட ் ட அவர ் பலாபலன ் களதைத ் தமிழில ் சொல ் லத ் தான ் அதனைச் சிங ் களத ் தில ் மொழிபயெர ் த ் துச ் சொன ் னதை விபரிக ் கிறார ் இப ் பகுுதியில ் . எதிர ் பாராததுு என ் ற தலபைப ் பில ் , மாஸ ் கோவில ் நடந ் த 12 ஆவதுு சர ் வதசே மாணவர ் இளஞைர ் மாநாட ் டில ் கலந ் துு கொண ் டபோதுு அங ் குும ் தொழுுகை நடத ் துுவதற ் கு வசதி சயெ ் துு தரப ் பட ் டதை ஆச ் சரியத ் துுடன ் கூறிப ் பிடுும ் அவர ் , தமக ் கு வழிகாட ் டியாக வந ் தவர ் சிங ் களம ் , தமிழ ் , ஆங ் கிலம ் பசேக ் கூடியவர ் என ் பதகைக ் கூறிப ் பிட ் டுுள ் ளார ் .

காலிமுுகத ் தில ் வீ திநிர ் மாணத ் தில ் பணிகளசைச ் சயெல ் படுுத ் துும ் சயெலாக ் காளராக பணி சயெ ் த போதுு முுன ் னாள ் பிரதமர ் தகநாயாக ் காவை மிக எளிமயைான மனிதராக சந ் தித ் ததை காலிமுுகம ் என ் ற தலபைப ் பின ் கீ ழ ் விபரித ் திருுக ் கிறார ் . பிரதமர ் பதவியிலிருுந ் த அவர ் , தரே ் தலில ் தோல ் வியுுற ் ற போதுு தனதுு விலகல ் கடிதத ் தை அளித ் துுவிட ் டுு, சபாநாயகரிடம ் சொல ் லிவிட ் டுு, பஸ ் ஸில ் ஏறிப ் போனதை வியப ் புுடன ் பார ் த ் துு - தமிழகத ் தின ் முுதலமசைச ் சராக இருுந ் த காமராஜருுடன ் ஒப ் பிட ் டுு தனதுு உணர ் வுுகளை நூலாசிரியர ் இத ் தலபைப ் பில ் பகிர ் ந ் திருுக ் கிறார ் .

கண ் ணுுக ் குுள ் சகோதரி என ் ற தலபைப ் பில ் , ஜே.வி.பி. என ் றுு ஆங ் கிலத ் தில ் சுருுக ் கமாகச ் சொல ் லப ் பட ் ட மக ் கள ் விடுுதலை முுன ் னணியின ் காலத ் தில ் , 1971 ஆம ் ஆண ் டுு நடபைறெ ் ற ஆயுுதக ் கிளர ் ச ் சி பற ் றிக ் கூறிப ் பிட ் டுு, ஆயிரக ் கணக ் கான இளஞைர ் களபைப ் பலி கொள ் ளுுவதற ் கு காரணகர ் த ் தாக ் களான - சூத ் திரதாரிகளான ரோகண விஜவீே ரா, லயனல ் போப ் பகே, உபதிஸ ் ஸ கமநாயக ் கா, லொக ் கு அத ் துல, பொடி அத ் துல, தர ் மசகேர, விஜயசகேர ஆகியோரின ் கதைுக ் குப ் பின ் கிளர ் ச ் சி முுடிவுுக ் கு வந ் ததகைக ் கூறிப ் பிட ் ட நூலாசிரியர ் , இலங ் கை ஆசிரியர ் சங ் கப ் பணிமனயைில ் சிங ் களப ் பிரசுரங ் களை தமிழில ் மொழிபயெர ் த ் துு , சுுவரொட ் டிகளை தான ் எழுுதுும ் போதுு தனதுு கண ் ணில ் சிவப ் புு மை விழுுந ் துு

நூல் நயப்புரை: சமூகப்பயம், மதிப்பின் பாதிப்புக்கு அப்பால் அறத்தைப்பேசும் ' சொல்ல மறந்த க

Written by - ஏலையா க. முருகதாசன் - ஜேர்மனி -
Thursday, 04 August 2016 19:15 - Last Updated Thursday, 04 August 2016 19:22

அதனால் தான் கஸ்டப்பட்ட போது அங்கு பணியாற்றிய சிங்களச் சகோதரி, தனது வீட்டில் தனது தாயாரிடமோ அல்லது யாரிடமோ தாய்ப்பாலை வாங்கிக் கொண்டு
வந்து அன்பாக சகோதரா என அழைத்து தனது கண்ணில் விட்டதை
நெகிழ்ச்சியுடன் குறிப்பிடுகிறார்.

1984 ஆம் ஆண்டு நீர்கொழும்பில் நடந்த சம்பவத்தை இவ்வாறு விபரிக்கிறார், " நீர்கொழும்பில் எனது வீட்டுக்கருகாமையில் உள்ள வீடுகளிலிருந்து அழுகுரல்கள் கேட்டன, விசாரித்த போது மடுமாதா கோவிலுக்குப் போன அந்த வீடுகளைச் சேர்ந்த இளைஞர்கள் இயக்கத்தினால் கடத்தப்பட்டதனால் நீர்கொழும்பில் பதட்டம் ஏற்பட ஓர் இரவு தன்னைத் தேடிவந்த இளைஞர்கள், " நீங்கள் வீரகேசரியில்தானே வேலை செய்கிறீர்கள் ? எங்கடை ஆட்களை உங்கடை ஆட்கள் கடத்திப் போட்டார்கள் செய்தி போட எவ்வளவு காசு ? எனக் கேட்க, " செய்திக்கு காசு வாங்குவதில்லை " என்று சொல்லிவிட்டு, " கடத்தப்பட்ட இளைஞர்களை மனிதாபிமானத்துடன் விடுவிக்க வேண்டுமென்ற " செய்தி வீரகேசரியில் வந்திருப்பதை அவர்களுக்குக் காட்டி, பத்திரிகையை அவர்களிடமே கொடுத்ததை விபரிக்கும் நூலாசிரியர், சிங்கள இளைஞர்கள் கறுப்புக் கொடி கட்டுவதற்கும் சத்தியாக்கிரகம் இருப்பதற்கும் காவல்துறையிடம் அனுமதி கேட்ட போது , அவர்கள் அதற்கு மறுத்து, " காவல்துறையினரையும் இராணுவத்தினரையுந்தான் இயக்கம் சுட்டுக் கொல்லுகின்றது . அனுமதி தர முடியாது , நீர்கொழும்பில் பதட்டமேற்படும் வேண்டாத விபரீதங்கள் ஏற்படலாம் என இன ஐக்கியத்தை சிதைக்கக்கூடாது என்ற அந்த காவல்துறை அதிகாரியின் நேர்மையான மனிதாபிமான செயலைச் சொல்லாமல் சொல்லி ஒரு நல்ல அதிகாரியை இனங்காட்டியிருக்கிறார்.

நீர்கொழும்பை பிறப்பிடமாகக் கொண்டு வாழ்ந்த நூலாசிரியர் 1983 ஆம் ஆண்டு நடந்த இனக்கலவரம் காரணமாக யாழ்ப்பாணம் அரியாலைப் பகுதியில் இடம்பெயர்ந்து குடும்பமாக வாழ்ந்த போது தனது அனுபவங்களை, இயக்க இளைஞர்களுடனான அனுபவங்களை வழிகாட்டி மரங்கள் நகருவதில்லை என்ற தலைப்பில் விரிவாகவே குறிப்பிட்டிருக்கின்றார்.

காத்திருப்பு - புதுவை இரத்தினதுரை என்ற தலைப்பில், நூலாசிரியர் புதுவை இரத்தினதுரை மீது வைத்திருந்த மதிப்பையும் அன்பையும் அவருடனான நட்பினையும் அனுபவத்தையும் பல இடங்களில் விதந்துரைக்கிறார். " சிலாபம் முன்னேஸ்வரத்தில் தேர் நிர்மாணிப்பு பணிகளுக்காக வந்திருக்கிறார். சிறந்த சிற்பி. அவரது கையில் எழுதும் பேனை மட்டுமல்ல, மரங்களைச் செதுக்கி அற்புதமான சிலைகளை நேர்த்தியாக வடிவமைக்கும் கூரான உளியும் இருந்ததை எத்தனை பேர் அறிவார்கள்?"

" முன்னேஸ்வரம் தேவஸ்தானத்தில் சில உருவச்சிலைகளைப் பார்த்துவிட்டு அவற்றின் முன்னே கண்ணீர் மல்க, அவற்றின் வடிவமைப்புகளைப் பார்த்துக் கொண்டு அவர் நின்றதாக சிலாபம் உடப்பு பாடசாலை ஒன்றின் அதிபர் சொல்லியிருக்கிறார்"

" இப்படி மென்மையான இயல்புகளைக் கொண்ட புதுவை இரத்தினதுரை, வெடிமருந்துகளுக்கும், சயனைற் குப்பிகளுக்கும், ஆயுதங்களுக்கும் மத்தியில் எப்படி வாழத்தலைப்பட்டார் ? என்பது கண்டறியப்படாத ரிஷிமூலம்"

3 / 4

நூல் நயப்புரை: சமூகப்பயம், மதிப்பின் பாதிப்புக்கு அப்பால் அறத்தைப்பேசும் ' சொல்ல மறந்த க

Written by - ஏலையா க. முருகதாசன் - ஜேர்மனி -
Thursday, 04 August 2016 19:15 - Last Updated Thursday, 04 August 2016 19:22

இத்தலைப்பில், " போர் என்றால் உயிரிழப்பு தவிர்க்க முடியாதது, சரணடைய
முன்னர் அவர்கள் ஏன் சயனைற் குப்பிகளை மறந்தார்கள் " என்றும் நெஞ்சில்
துளியளவு ஈரமும் இல்லாமல் பேசியவர்கள் எங்கள் புலம்பெயர்ந்த தமிழ்மக்கள் மத்தியிலிருக்கிறார்கள்" என்பதும் பதியப்பட்டிருக்கின்றது.
நூலாசிரியர், புதுவை இரத்தினதுரையை மீண்டும் சந்திக்க வேண்டும். சரணடைந்த அவர் உயிரோடு திரும்பி வருவார் என்ற நம்பிக்கை காத்திருப்பைக் கொண்டிருக்கிறார்.

இந்நூல் முழுவதையும் வியப்புடன் வாசித்தேனெனினும், நான் மேலே குறிப்பிட்ட எல்லாத் தலைப்புகளின் சாராம்சங்கள் பற்றியும் குறிப்பிடவில்லை. ஆரம்பத்தில், ஏற்கனவே குறிப்பிட்டது போல ஒவ்வொரு வரியையும் அந்த வரிகளுக்குள் இருந்த ஒளிவு மறைவற்ற உண்மைகளையும் சிலாகித்து எழுதுவதானால் அதுவே ஒரு நூலாகிவிடும்.

இந்நூலை வாசித்த போது நூலாசிரியரின் என்ற இந்நூலுடன் அவர் சொல்ல வந்தவை அல்லது அவர் சந்தித்த சமகால உண்மை அனுபவங்கள் முற்றுபெற்றுவிட்டனவென்றோ நிறைவு பெற்றுவிட்டனவென்றோ சொல்ல முடியாது. பல அடுக்கு உண்மைகள் தொல்லியல் போல அவரின் மனதிற்குள்ளும் அறிவிற்குள்ளும் இன்னும் ஏராளம் உண்டு என்பது எனது திடமான முடிவாகும். அதிலும் சொல்லிய தலைப்புகளில், இன்னும் சொல்ல வேண்டியவை நிறைய இருக்கலாம் என்பதும் எனது கணிப்பீடு. பிறிதொரு சந்தர்ப்பத்தில் பாகம் இரண்டை எழுதுவார் என நம்புகிறேன். இந்நூல் சமூகப்பயம் கருதியோ , அல்லது தன்னைப் பற்றிய சமூகத்தின் மதிப்பில் பாதிப்பு ஏற்பட்டுவிடுமோ என்ற கௌரவத்திற்கப்பால், ஒரு எழுத்தாளன் தனது பேனாவில் உண்மை என்ற ஒன்றை அறம் என்ற மையை நிரப்பி எழுதிய நூல் இது. இந்நூலை வாசிப்பவர்களுக்கு புது அனுபவம் கிடைக்கும். இதுவரை அறியாத சமூக மாந்தரின் நடத்தைகளை இந்நூல் மூலம் அறிய முடியும்.

4 / 4